**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு திட்டங்களை 2010–2011 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்திட நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை</u>

அரசாணை(நிலை) எண்.11 நாள்: 15–02–2011

மாசி 3, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது:-

1. அரசாணை(நிலை) எண்.58, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 11.3.2010.
2. அரசாணை(நிலை) எண்.78, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 29.3.2010.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண். 9802/ த.நா.மா.தி.ந.வா/2010, நாள் 30.9.2010 மற்றும் 03.02.2011.

------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.00 கோடியில் ரூ.85.00 இலட்சங்கள் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கும், வருவாய் பெருக்கும் திட்டங்களுக்கும், மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்திற்கும் மற்றும் ரூ.15.00 இலட்சங்கள் நிர்வாக செலவிற்கும் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்து ஆணை வழங்கப்பட்டது. மேலும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2009–2010ஆம் ஆண்டு விண்ணப்பித்தவர்களுக்கு உதவித் தொகையினை உடனடியாக வழங்கிட வாரியத்தின் நிதி ரூ.93,79,500/–லிருந்து ரூ.61,47,950/– செலவினம் மேற்கொள்ள வாரியத் தலைவரின் அனுமதி பெற்று வழங்கப்பட்டது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேலே படிக்கப்பட்ட தமது கடிதத்தில் 2009–2010 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரியத்தின் முலம் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கு ரூ.1.00 கோடி மட்டும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்தொகையானது தன்வைப்பு கணக்கின் கீழ் வரவு வைக்கப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது என்றும் இதன்படி ரூ.85.00 இலட்சம் சமூக பாதுகாப்பு

திட்டங்களுக்காக செலவிடப்பட்டது என்றும் நிர்வாக செலவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.15.00 இலட்சத்தில் ரூ.7,97,222/– மீதமுள்ளது என்றும் இத்தொகையின் மூலம் 2010–2011 ஆம் நிதியாண்டில் நிர்வாக செலவுகளை மேற்கொள்ள இயலும் என்றும் 2010–2011 ஆம் நிதியாண்டில் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கென ரூ.1.00 கோடியினை செலவு செய்திட அரசின் அனுமதி ஆணை வேண்டப்படுகிறது என்றும் 2010–2011 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் வாரியத்திற்கென ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு ஏற்று 2010–2011 ஆம் நிதியாண்டில் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கென ரூ.85.00 இலட்சம் (ரூபாய் என்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் மற்றும் 2009–2010 ஆம் ஆண்டில் நிர்வாகச் செலவினங்களுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.15.00 இலட்சத்தில் ரூ.7,97,222/– செலவிடப்படாமல் உள்ள மீதித் தொகையுடன் ரூ.7,02,778/– வழங்க ஒப்புதல் வழங்கியும் ஆக மொத்தம் ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) 2010–2011 ஆம் ஆண்டில் நிர்வாகச் செலவுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் கூட்டத்தில் வைக்கப்பட்டு அதன் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே, செலவினம் மேற்கொள்ளுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநிலத் திட்டம் – ME – மாற்றுத் திறனாளிகளுக்கான நல வாரியத்திற்கு மானியங்கள்–09– உதவித் தொகை 03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
>
> (த.தொ.கு..2235–02–101–ME-0936)

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கு பணமாக வழங்கப்படாமல் இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பெயரிலான பின்வரும் தன்வைப்பு கணக்கில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக வரவு வைக்கப்பட வேண்டும்:–

> K வைப்பீடுகளும் முன்பணங்களும் (b) வட்டியில்லா வைப்பு தொகைகள் 8443.00 உரிமையியல் வைப்பீடுகள் 800 இதர வைப்பீடுகள் DW தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியத்திற்கான வைப்பீடுகள்.
>
> DPC 8443 00 800 DW 000C (வரவுகள்)<br>
> DPC 8443 00 800 DW 0008 (செலவுகள்)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி (சந)/8790/11, நாள் 15.2.2011–ன்படி அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் / அனைத்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்கள். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35(பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை– 9/18/35

<u>நகல்:–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (சமூக நலம்)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.